டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 26.10.2026 திங்கள்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 107 | Madurai | Online Edition

## அர்னாப் புயல் எதிரொலி

# தமிழக துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் கூண்டு ஏற்றம்

சென்னை, அக்.25

வங்கக்கடலில் உருவாகியுள்ள 'அர்னாப்' புயலினால் தமிழக துறைமுகங்களில் ஒன்றாம் எண் எச்சரிக்கை புயல் கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

வங்கக்கடலில் நிலவிவந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுபெற்று, தொடர்ந்து மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது. இது இன்று (26) மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில், 'அர்னாப்' புயலாக மாறலாம்.

மேலும், அக்.27-ம் தேதி தீவிர புயலாகவும், 28-ல் மிக தீவிர புயலாகவும் வலுப்பெறக்கூடும். ஆந்திராவின் பாபட்லா - விசாகப்பட்டினம் இடையே மிக தீவிர புயலாக 28ம் தேதி முற்பகல் கரையை கடக்கக்கூடும். புயல் கரையை கடக்கும்போது மணிக்கு 140 கி.மீ. வேகத்தில் பலத்த சூறைக்காற்று வீசக்கூடும் எனவும் வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வரும் 2 நாட் களுக்கு கனமழை முதல் அதி கனமழை வரைக்கும் வாய்ப்பிருப்பதாக இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதனால், ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழக துறைமுகங்களில் பாம்பன், தூத்துக்குடி, நாகப்பட்டினம், காரைக்கால், கடலூர், புதுச்சேரி, காட்டுப்பள்ளி, சென்னை, எண்ணூர் ஆகிய துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் கூண்டு ஏற்றப்பட்டது.

மீனவர்கள் அக்டோபர் 25 முதல் 29 வரை கடலுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், கரையோரங்களில் மீனவர்கள் தங்களது படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுமாறு மீன்வளத்துறை அறிவுறுத்தி உள்ளது.

# உர விற்பனை நிலையங்களில் விலை விவரப் பலகை தினசரி பராமரிக்க வேண்டும்

## வேளாண் இணை இயக்குநர் தகவல்

புதுக்கோட்டை, அக்.25

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டாரத்தில் விலை விவர பலகை மற்றும் உரம் இருப்பு விவரங்களை சரியாக பராமரிக்காத உர விற்பனை நிலையங்களுக்கு தடை விதிக்கப்பட்டது என மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) ந.சண்முகஜெயந்தி தெரிவித்துள்ளர்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது சம்பா சாகுபடிக்கு தேவையான உரங்கள் மற்றும் மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து, கரும்பு, தென்னை, காய்கறிகள், மா, வாழை மற்றும் மரவள்ளி கிழங்கு ஆகிய பயிர்களுக்கும் தேவையான உரங்கள் யூரியா 7340 மெட்ரிக் டன்கள், டிஏபி 2175 மெட்ரிக் டன்கள், பொட்டாஷ் 1142 மெட்ரிக் டன்கள், காம்ப்ளக்ஸ் 3148 மெட்ரிக் டன்கள் மற்றும் சூப்பர் பாஸ்பேட் 770 மெட்ரிக் டன்கள் ஆகியன தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டாரத்திலுள்ள உர விற்பனை நிலையங்களில் வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) (பொ) சி.முகமது ரபி மற்றும் அறந்தாங்கி வட்டார வேளாண்மை அலுவலர் தி.பாக்யா ஆகியோரால் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. உர விற்பனை நிலையங்களில் உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985-இன்படி உர விற்பனை உரிமம் பெற்று விற்பனை நடைபெறுகிறதா, அனுமதி பெற்ற இடங்களில் விற்பனை நடைபெறுகிறதா, விவசாயி களுக்கு உர விற்பனை பட்டியல்கள் முறையாக வழங்கப்படு கிறதா, உரங்கள் விற்பனை முனையக் கருவி மூலம் விற்பனை செய்யப்படுகிறதா மற்றும் உர கொள்முதல் பட்டியல்கள், உர இருப்பு ஆகியவைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

ஆய்வின்போது உரக்கட்டுப்பாட்டு ஆணையின்படி விலை விவர பலகை மற்றும் உரம் இருப்பு விவரங்களை சரியாக பராமரிக்காத 2 உர விற்பனை நிலையங்களுக்கு விற்பனை தடை விதிக்கப்பட்டது மற்றும் 2 விற்பனை நிலையங்களுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகளுக்கு தரமான உரங்கள் விநியோகம் செய்யப் படுகிறதா என உர ஆய்வாளர்கள் திடீர் ஆய்வு மேற்கொள்ளும் பொழுது, உரங்களை, அதிக விலைக்கு விற்பனை செய்தல், விவசாயம் அல்லாத தேவைகளுக்கு மானிய உரங்களை விற்பனை செய்தல், உரம் கடத்தல், பதுக்கல் ஆகிய செயல் களில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால் அத்தியாவாசிய பண்டங்கள் சட்டம் 1955, உரக்கட்டுபாட்டு ஆணை - 1985 மற்றும் உர நகர்வு கட்டுப்பாட்டு ஆணை 1973 ஆகியவற்றின்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மீறினால் உர உரிமம் இரத்து செய்யப்படும் எனவும் எச்சரிக்கப்படுகிறது என புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் (பொ) நசண்முகஜெயந்தி தெரிவித்துள்ளார்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# மண்புழு உரம் தயாரிப்பு குறித்து விவசாயிகளுக்கு கல்லூரி மாணவிகளின் செயல்விளக்கப் பயிற்சி




பெரம்பலூர், அக்.25

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரம், சிறு வயலூர் கிராமத்தில் திருச்சி நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு மாணவிகள் வ.அபிதா, செ.தேவதர்ஷினி, ச.தன லெட்சுமி, ச.ஹரிணி, ஜா.செ.ஹெலீனா ஜாண், சே.ஜெயஶ்ரீ, ர.பி.காவியா, ச.சுபிக்ஷா, வி.வித்யா மற்றும் ப.யுவராணி ஆகியோர், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இதன் வாயிலாக, மாணவிகள் நாட்டார்மங்கலம் கிராம விவசாயி களுக்கு மண்புழு உரம் தயாரிக்கும் முறை மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து செயல்விளக்கப் பயிற்சி அளித்தனர். இன்றைய காலகட்டத்தில் வேளாண்மையில் இரசாயன உரங்களின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. இதனால் மண்ணின் வளம் குறைவதுடன், சுற்றுச்சூழலும் பாதிக்கப்படுகிறது. இதனைத் தவிர்க்க இயற்கை முறையில் தயாரிக்கப்படும் மண்புழு உரம் மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

மண்புழுக்கள் மட்கும் கரிமக் கழிவுகளைச் சிறந்த இயற்கை உரமாக மாற்றுகின்றன. இவ்வுரம் மண்ணின் வளத்தை அதிகரிப்பதுடன், பயிர்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது. மேலும், மண்புழு உரம் தயாரிக்கும் முறையைப் பயன்படுத்தி கால்நடைக் கழிவுகள், இலைதழைகள் மற்றும் காய்கறிக் கழிவுகள் போன்றவற்றை பயனுள்ள உரமாக மாற்றலாம். இதன் மூலம் வேளாண் செலவைக் குறைத்து, மண்ணின் இயற்கைத் தன்மையைப் பாதுகாக்க முடியும்.

இச்செயல்விளக்கம் இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த இயற்கை வழிமுறைகளைப் பின்பற்றுவதன் அவசியத்தையும், விவசாயிகளிடையே இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தி, குறைந்த செலவில் பயிர்ப் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற உதவியாக அமைந்தது. இறுதியாக, இப்பயிற்சி குறித்த விவசாயிகளின் சந்தேகங்களை மாணவிகள் அவர்களுக்கு தெளிவுபடுத்தினர்.

# சித்தமல்லியில் உழவன் செயலி மற்றும் விவசாய கடன் அட்டை விளக்கம் அளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



திருவாரூர், அக்.25

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் உள்ள சித்தமல்லி கிராமத்தில் உழவன் செயலி மற்றும் விவசாய கடன் அட்டை குறித்து வேளாண் கல்லூரி மாணவிகள் விளக்கம் அளித்தனர். கீழ்வேளூரில் உள்ள வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் இறுதியாண்டு மாணவிகள் உழவன் செயலியின் பயன்பாடு குறித்தும் விவசாய கடன் அட்டையின் முக்கியத்துவம் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். உழவன் செயலி என்பது தமிழ்நாடு அரசின் வேளாண்மை உழவர் நலத்துறை வெளியிட்ட அதிகாரப்பூர்வ மொபைல் செயலி ஆகும். 2018 ஏப்ரல் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் ஒரே இடத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வழங்குகிறது.

**முக்கிய சேவைகள் :** மானியத் திட்டங்கள், இடுபொருள் முன்பதிவு, பயிர் காப்பீடு, உரங்கள் இருப்பு நிலை, விதை இருப்பு நிலை, வேளாண் இயந்திரங்கள் வாடகை, சந்தை விலை நிலவரம், வானிலை அறிவுரைகள், உழவர் அலுவலர் தொடர்பு, பண்ணை வழிகாட்டி, இயற்கை / அங்ககப் பண்ணைப் பொருட்கள், FPO தயாரிப்புகள், பூச்சி / நோய் கண்காணிப்பு, உழவன் இ–சந்தை (e-Market), என 24 சேவைகளை வழங்குகிறது. விவசாய கடன் அட்டை மூலம் விவசாயிகள் எளிமையாக வங்கிக் கடன்களை பெற முடிகிறது. விவசாய கடன் அட்டையை பெற வணிக வங்கிகள் கூட்டுறவு வங்கி கிராமப்புற வங்கிகள் ஆகியவற்றின் விண்ணப்பிக்கலாம். இதற்கு தேவையான ஆவணங்கள் ஆதார் அட்டை, அடங்கல் கணினி சிட்டா, புகைப்படம். நிலம் வைத்துள்ள விவசாயிகள், குத்தகை மற்றும் பங்கு விவசாயிகள், கால்நடை, பால் பண்ணை, மீன்வள தொழிலாளர்களும் விவசாய கடன் அட்டையை பெறலாம். இரண்டு லட்சம் வரை பிணையம் இல்லாத விவசாய கடன் வழங்கப்படும். கடன் காலம் பொதுவாக 5 ஆண்டுகள் மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிய விவசாய கடன் பெற வேண்டும்.

# ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி



மயிலாடுதுறை, அக்.25

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் வட்டாரம், ஈச்சங்குடி கிராமத்தில் வேளாண்மைத் துறை மற்றும் அட்மா திட்டத்தின் கீழ், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மூலம் சீரான உரப் பயன்பாடு மற்றும் இரசாயன உரங்களைக் குறைத்தல் குறித்த விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு வேளாண்மைத் துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்) செல்வராஜ் தலைமை தாங்கி, மண் வளத்தைப் பாதுகாத்து, பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துகளைச் சரியான அளவில் வழங்குவதன் அவசியம் குறித்து விளக்கினார். மேலும், மண் பரிசோதனையின் அடிப்படையில் உரமிடுதல், இயற்கை உரங்கள் மற்றும் உயிர் உரங்களைப் பயன்படுத்துதல், இரசாயன உரங்களைப் பயிர்களின் தேவைக்கேற்ப சிக்கனமாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

வேளாண்மை உதவி இயக்குநர் செந்தில்குமார், வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள், விவசாயிகளுக்குக் கிடைக்கும் நலத்திட்ட உதவிகள் மற்றும் வேளாண் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினார்.

துணை வேளாண்மை அலுவலர் உமா, அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ரைசோபியம் போன்ற உயிர் உரங்களின் பயன்பாடு, அவற்றின் நன்மைகள், விதை நேர்த்தி மற்றும் மண்ணில் இடும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார்.

மேலும், தொழு உரம், மண்புழு உரம், பசுந்தாள் உரம் மற்றும் பயிர்க்கழிவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் கரிமச் சத்தை அதிகரிக்கலாம் என்றும், மண் பரிசோதனை முடிவுகளின்

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

அடிப்படையில் பரிந்துரைக்கப்பட்ட அளவில் இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உரச் செலவைக் குறைத்து, மண் வளத்தையும் பயிர் உற்பத்தியையும் மேம்படுத்தலாம் என்றும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் வேதராஜன் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் செல்வகுமரன் ஆகியோர் செய்திருந்தனர். பயிற்சியின் நிறைவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் தியாகு நன்றி கூறினார்.

இப்பயிற்சியில் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.



# நஞ்சில்லா விவசாயம்!

மண்ணைக் காப்போம்! மக்களைக் காப்போம்!
மருந்தின் பயன்பாட்டை முறைப்படுத்துவோம்!
நஞ்சில்லா உணவை உருவாக்கிடுவோம்!
நலமான உலகைப் படைத்திடுவோம்!

பசுமை போர்த்திய வயல்களிலே,
பயிர்கள் செழிக்க வேண்டும்!
பறவைகள் பாடும் தோட்டங்களிலே,
பசுமை என்றும் வாழ வேண்டும்!

பூச்சிகள் தாக்கும் பயிர்களைக் காக்க,
பூச்சிக்கொல்லி தெளிக்கின்றோம்!
அளவுக்கு மீறி அதனைப் பயன்படுத்தி,
ஆரோக்கியத்தை இழக்கின்றோம்!

மண்ணில் வாழும் நுண்ணுயிர்களும்,
மண்புழுக்களும் நம் நண்பர்களே!
நஞ்சினைத் தெளித்து அவற்றை அழித்தால்,
நாளைய விளைச்சல் கேள்விக்குறியே!

தேனீக்கள் தேடி மலர்கள் மலர,
இயற்கைச் சுழற்சி தொடர வேண்டும்!
நன்மை செய்யும் உயிர்களைக் காத்து,
நல்லதோர் சூழல் அமைய வேண்டும்!

நீரிலும் மண்ணிலும் நஞ்சு கலந்தால்,
நிம்மதி வாழ்வு ஏது?
உணவுச் சங்கிலியில் நஞ்சு புகுந்தால்,
உயிர்களின் எதிர்காலம் ஏது?

ஹார்மோன் சீர்குலைவு, நரம்புப் பாதிப்பு,
உடல்நலக் கேடுகள் வரலாம்!
பூச்சிக்கொல்லி எச்சங்கள் உணவில் தங்கினால்,
பாதிப்புகள் ஏற்படலாம்!

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு,
அறிந்தே செயல்படுவோம்!
தேவையற்ற வேதிப் பயன்பாட்டைக் குறைத்து,
தெளிந்த அறிவுடன் விவசாயம் செய்வோம்!

பூச்சி வந்ததுமே மருந்தைத் தெளிக்காமல்,
பூச்சியின் தன்மையை அறிந்திடுவோம்!
பயிரின் பாதிப்பை ஆராய்ந்து பார்த்து,
தேவையான வழியைத் தேர்ந்தெடுப்போம்!

இயற்கை வழியில் பூச்சியை விரட்ட,
வேம்பின் ஆற்றலைப் பயன்படுத்துவோம்!
இயற்கை எதிரிகள் துணையுடன் நின்று,
பூச்சிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவோம்!

கலப்புப் பயிர்களும் பொறிவகைகளும்,
இயற்கை வழியில் துணை நிற்கும்!
ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை,
உழவரின் நம்பிக்கையை உயர்த்தி நிற்கும்!

தவிர்க்க முடியா நிலையில் மருந்தைப் பயன்படுத்தினால்,
பரிந்துரைத்த அளவைப் பின்பற்றுவோம்!
அங்கீகரிக்கப்பட்ட மருந்தைத் தேர்ந்தெடுத்து,
பாதுகாப்பு உடைகளை அணிந்திடுவோம்!

காற்றின் திசையை அறிந்து தெளிப்போம்,
குறிப்பிட்ட இடைவெளி காத்திடுவோம்!
அறுவடைக்கு முன் காத்திருக்கும் காலத்தைப்
பின்பற்றி நச்சின் எச்சத்தைக் குறைத்திடுவோம்!

குழந்தைகள், கால்நடைகள் அணுகாதபடி,
மருந்தினைப் பாதுகாத்து வைப்போம்!
நீர்நிலைகள் மாசடையாமல் காத்து,
விதிமுறைகளை முறையாகப் பின்பற்றுவோம்!

விளம்பரத்தை நம்பி மருந்து வாங்காமல்,
வல்லுநர் ஆலோசனை கேட்டிடுவோம்!
எதிர்ப்பு சக்தி பூச்சிக்கு வராமல்,
பரிந்துரைத்த முறையில் பயன்படுத்திடுவோம்!

உழவரின் உழைப்பும் உயர்ந்திட வேண்டும்,
உணவின் தரமும் உயர்ந்திட வேண்டும்!
மக்களின் நலமும் மண்ணின் வளமும்,
மகத்துவம் பெற்று நிலைத்திட வேண்டும்!

இயற்கை விவசாயம் வளர்ந்திட வேண்டும்,
இனியதோர் எதிர்காலம் மலர்ந்திட வேண்டும்!
வேதிப் பயன்பாட்டைக் குறைத்திடுவோம்,
விவேகமான விவசாயம் செய்திடுவோம்!

நஞ்சைக் குறைப்போம்! நலத்தைக் காப்போம்!
நல்லுணவு உற்பத்தியைப் பெருக்கிடுவோம்!
இயற்கையை நேசிப்போம்! இனிதே வாழ்வோம்!
இனிவரும் தலைமுறையைப் பாதுகாப்போம்!

பச்சிக்கொல்லியைக் குறைப்போம்;

இயற்கை வழியைப் பின்பற்றுவோம்;

நஞ்சில்லா உணவால் நலமான வாழ்வை உருவாக்கு வோம்!

தொகுப்பு : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர். கைபேசி எண் : 82480 80922.***

# கிராமப்புற மதிப்பீடு செய்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



காஞ்சிபுரம், அக்.25

SRM வேளாண் அறிவியல் கல்லூரியின் இறுதியாண்டு RAWE மாணவர்களான AUGUSTE COMTE'26 குழுவினர், கிராமத்தைச் சேர்ந்த 30 பெண்களின் பங்கேற்புடன் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு (PRA) நடத்தினர். இதன் மூலம் கிராமத்தின் தேவைகள், பிரச்சினைகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து அறிந்து கொண்டு, கிராமத்தின் முன்னேற்றத்திற்கான வளர்ச்சித் திட்டங்களையும் பரிந்துரைத்தோம்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மழைக்கால பயிர் பாரமரிப்பு முறைகள்

கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவ மழை தேவைக்கு அதிகமாக பொழிகிற போது மானாவாரி இறவையில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் பல்வேறு நிலைகளில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. தொடர் மழையில், இருந்து பயிர்களை காப் பாற்றுவது குறித்து விரிவாக பயிர்கள் வாரியாக பார்ப்போம்.



**1) நெல்**

தற்போது நடவு,விதைப்பு முதல் 15-30 நாட்கள் பயிராகவும் டெல்டா மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. தற்போதை மழையால் அளவுக் கதிகமான தண்ணீர் வயலில் தேங்கியுள்ள நிலையில் அவற்றை வடிக்க வேண்டும். வயல்களில் வரப்பு ஓரங்களில் வாய்க்கால் வெட்டி வடிக்க வேண்டும். அதிக அளவாக மழைநீர் தேங்கி இருந்தால் கோனோ வீடர் / ரோட்டரி வீடர் கொண்டு களையெடுப்பதன் மூலமாக வயல்களில் தரை அழுத்தம் கொடுக்க வேண்டும். அதிக படியான மழை நீரால் நீர்வடிந்த பின் பயிர்களுக்கு ஊட்டசத்து பற்றாக்குறை ஏற்படும்.

இதனை தடுக்க 5:4:1 என்ற அளவில் யூரியா 22 கிலோ + 18 கிலோ ஜிப்சம் + 4 கிலோ வேப்பம் பிண்ணாக்கு கலந்து ஒரு இரவு வைத்திருந்து மறுநாள் காலையில் இவற்றுடன் 18 கிலோ பொட்டாஷ் உரத்தை கலந்து நெல்பயிருக்கு மேலுரமாக இட வேண்டும். மழை நின்ற பின் தான் இடவேண்டும். வயலில் 2-3 செ.மீ நீர் இருக்கமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அதிக மழை பொழிவு உள்ள இடங்களில் சி.ஆர்.1009, சுவர்ணா சப், போன்ற நெல் ரகங்களை பயிரிடலாம்.

### 2) மக்காசோளம் + சிறு தானியங்கள்

இதுவும் விதைப்பு முதல் 30 நாட்கள் பயிராக உள்ளது. நிலத்தில் தேங்கியுள்ள நீரை வடிக்க வேண்டும். மழைவிட்ட பின் மேலுரம் இடவேண்டும். களைக்கொல்லி தெளிப்பதாக இருந்தால் அதிகப்படியான தண்ணீர் நிலத்தில் இருக்கக் கூடாது.

### 3) பருத்தி+ பயறுவகை பயிர்கள்

பருத்தி வயலில் தேங்கியுள்ள நீரை வடிக்க வேண்டும். பயறுவகை பயிர்கள் மழையால் பாதிக்கப்பட்ட நிலையில், மழைவிட்ட பின் ஊட்டசத்து கரைசல் (டி.ஏ.பி) தெளிக்க வேண்டும். பயிர் பாதுகாப்பு தேவைபடின் மழை விட்டபின் பூச்சி மருந்துயுடன் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும்.

### 4) நிலக்கடலை- எண்ணெய் வித்து பயிர்கள்

மழை நின்ற பின் எள், சூரியகாந்தி மானாவாரியாக விதைக்க லாம். தற்போது நிலக்கடலையில் தண்ணீர் தேங்கி இருந்தால் செடிகள் வெளுத்து போகும். நுண்ணூட்ட சத்து பற்றாக் குறையாக இருக்கும். இவற்றை போக்கிட டி.ஏ.பி 1 கிலோ + 400 கிராம் அம்மோனியம் சல்பேட் + 200 கிராம் போராக்ஸ் கலந்து 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். நிலக்கடலை உருவாகும் பகுதிகளில் நீர் தேங்கி இருந்தால் ஒரு ஓரமாக நிலத்தில் தண்ணீரை வடிக்க வேண்டும்.

வாழை மரங்கள் புயல், காற்று, மழையின் காரணமாக சாயந்து விடும். அவற்றைத் தடுக்க முட்டு (மூங்கல், சவுக்கு மரம்) கொண்டு தர வேண்டும். வாழை வயலில் தேங்கியுள்ள நீரை காண் வெட்டி வெளியேற்ற வேண்டும்.

### விவசாயிகளுக்கான மழைகால எச்சரிக்கை.?

இடி. மின்னலின் போது வயல் பணிகளில் விவசாயிகள் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். மரத்தடியில் மழைக்காக ஒருபோதும் ஒதுங்க கூடாது. மின்சார மோட்டார்களை இயக்குவதை எச்சரிக்கை உடன் செயல்படவேண்டும்.

எனவே விவசாயிகள் இந்த மழைக்கால கட்டத்தில் கவனமாக எச்சரிக்கையாகவும் செயல்பட வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பஞ்சகவ்யம் தயாரித்தல் குறித்த செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

காஞ்சிபுரம், அக்.25

டான் போஸ்கோ வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள், சாருகேஷ் ர, ரமணா ஜெ, ரஞ்சித்குமார் மு, சஞ்சீவி பெ, சஞ்சய் வெ, சத்யஜித் ஜெ, சாம்சன் ச, சர்வேஷ் ரா, ரெம்யூஸ் ஆண்டோ அ, ருத்திரன் தே என்ற மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE – Rural Agricultural Work Experience) கீழ், காஞ்சிபுரம் மாவட்டம், தேவரியம்பாக்கம் கிராமத்தில் விவசாயிகளுக்கு பஞ்சகவ்யம் தயாரித்தல் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்த செயல்விளக்க நிகழ்ச்சியை நடத்தினர்.



இந்நிகழ்ச்சியில் சுமார் 30 விவசாயிகள் கலந்து கொண்டனர். இயற்கை வேளாண்மையில் முக்கியப் பங்கு வகிக்கும் பஞ்சகவ்யத்தின் தயாரிப்பு முறை, அதற்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் பயிர்களில் அதன் பயன்பாடுகள் குறித்து மாணவர்கள் விளக்கினர். பஞ்சகவ்யம் என்பது பசுவிலிருந்து கிடைக்கும் ஐந்து பொருட்களான பசுஞ்சாணம், கோமியம், பால், தயிர் மற்றும் நெய் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, வெல்லம், வாழைப்பழம், இளநீர் போன்ற கூடுதல் பொருட்களுடன் குறிப்பிட்ட முறையில் தயாரிக்கப்படும் இயற்கை வேளாண் இடுபொருளாகும்.

இந்தச் செயல்விளக்கத்தின் மூலம் பஞ்சகவ்யம் தயாரிக்கும் முறை, அதனைப் பயிர்களுக்குப் பயன்படுத்தும் விதம் மற்றும் இயற்கை வேளாண்மையில் அதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

மேலும், ரசாயன இடுபொருட்களைச் சார்ந்திருப்பதைக் குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண் முறைகளைப் பின்பற்றுவதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சி விவசாயிகளிடையே இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, பாரம்பரிய வேளாண் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த ஊக்கமளிக்கும் வகையில் அமைந்தது.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# வீடுகள் மற்றும் பண்ணை இல்லங்களுக்கான சூரிய மின்சக்தி (Solar Rooftop) தொழில்நுட்பம்

- விவசாயக் குடும்பங்கள் மற்றும் கிராமப்புற வாழ்வாதாரத்தில் விவசாயப் பணிகளுக்கான மின்சாரம் மட்டுமின்றி பண்ணை வீடுகள், களத்துமேடுகள், ஆடு மாடு கொட்டகைகள் மற்றும் குடியிருப்புகளுக்கான அன்றாட வீட்டு மின்சாரச் செலவும் கூடுதல் நிதிச்சுமையாக மாறுகிறது.

- இந்தச் சூழலில், சூரிய ஒளியிலிருந்து நேரடியாகத் தூய்மையான மின்சாரத்தைத் தயாரிக்கும் சோலார் ரூப்டாப் (Solar Rooftop) அமைப்புகள் மின்கட்டணத்தை முழுமையாகவோ அல்லது கணிசமான பகுதியாகவோ குறைக்க உதவுகின்றன.

- சூரிய ஒளி மின் தகடுகள் (Solar PV Panels) சூரியனிலிருந்து வெளிப்படும் ஒளிக்கதிர்களை உறிஞ்சி நேரடி மின்னோட்டமாக (DC) மாற்றுகின்றன. இன்வெர்ட்டர் மூலம் அது மாறுதிசை மின்னோட்டமாக (AC) மாற்றப்பட்டு வீட்டின் மின்சாதனங்களுக்கு வழங்கப்படுகிறது.

- பகலில் தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகும் மின்சாரம் நெட் மீட்டரிங் (Net Metering) முறையில் மின்வாரியத்திற்கு அனுப்பப்பட்டு, இரவில் பயன்படுத்தும் மின்சாரத்துடன் ஈடு செய்யப்படுகிறது. இது நிலக்கரி மின்சாரத்தைச் சார்ந்திருக்காமல் மாதாந்திர மின் கட்டணத்தைச் சேமிக்க உதவும் தூய்மையான புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலமாகும்.

- சோலார் பேனல்களை அமைப்பதற்குத் தகுந்த திறந்தவெளி இடமும் சரியான கோணமும் மிக அவசியமான காரணிகளாகும். பொதுவாக, 1 கிலோவாட் (1 kw) திறன் கொண்ட அமைப்புக்குச் சுமார் 100 சதுரஅடி நிழல் படாத திறந்தவெளி இடம் தேவைப்படும். இதன் படி 2 kw அமைப்பிற்கு 200 சதுர அடியும், 3 kw அமைப்பிற்கு 300 சதுரஅடியும், 5 kw அமைப்பிற்கு 500 சதுரஅடியும் தேவை.

- ஆண்டு முழுவதும் உச்சபட்ச சூரிய ஒளி நேராக விழுந்து அதிக மின் உற்பத்தி கிடைப்பதற்காக, வீட்டின் மொட்டை மாடியிலோ அல்லது பண்ணைத் தரையிலோ பேனல்களை எப்போதும் தென் திசையை (South Direction) நோக்கிச் சாய்த்து அமைக்க வேண்டும். இந்தியாவின் தட்பவெப்ப நிலையின்படி 1 kw அமைப்பு சராசரியாக நாளொன்றுக்கு 4 to 5 யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது.

- இரண்டு மாத மின் பயன்பாடு 500 யூனிட் வரை உள்ள வீடுகளுக்கு 1 kw, 700 யூனிட் வரை உள்ளவர்களுக்கு 2 kw மற்றும் 1000 யூனிட் வரை நுகர்வு இருப்பவர்களுக்கு 3 kw அமைப்பு போதுமானது. நுகர்வு 1000 யூனிட்டிற்கு மேல் இருந்தால், ஒவ்வொரு கூடுதல் 300 யூனிட்டிற்கும் தலா 1 kw வீதம் சோலார் திறனைக் கூடுதலாக அமைக்க வேண்டும்.

- மத்திய அரசின் 'பி.எம் சூர்ய கர்' மற்றும் மாநில அரசின் திட்டங்கள் இணைந்து விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் நேரடி மானியங்களை வழங்குகின்றன. 1 kw அமைப்பு நிறுவ மத்திய அரசு மானியம் ரூ.30,000 மற்றும் மாநில அரசு மானியம் ரூ.5,000 என மொத்தம் ரூ.35,000 மானியம் வழங்கப்படுகிறது. இதற்கு ஆகும் தோராய மொத்தச் செலவு ரூ.70,000 ஆகும்.

- **2 kw அமைப்பு :** மத்திய அரசு மானியம் ரூ.60,000 மற்றும் மாநில அரசு மானியம் ரூ.10,000 என மொத்தம் ரூ.70,000 மானியம் கிடைக்கிறது. இதற்கு ஆகும் தோராய மொத்தச் செலவு ரூ.1,40,000 ஆகும்.

- **3 kw மற்றும் அதற்கு மேற்பட்ட அமைப்பு :** மத்திய அரசு மானியம் ரூ.78,000மற்றும் மாநில அரசு மானியம் ரூ.22,000 என மொத்தம் ரூ.1,00,000மானியம் கிடைக்கிறது. இதற்கு ஆகும் தோராய மொத்தச் செலவு ரூ.2,00,000 ஆகும்.

- சிஸ்டம் நிறுவப்பட்டு மின்வாரிய ஆய்வு முடிந்ததும், இந்த மானியத் தொகை நேரடியாகப் பயனாளியின் வங்கிக் கணக்கிலேயே வரவு வைக்கப்படுகிறது. இத்திட்டத்தில் பதிவு செய்வதற்குச் சமீபத்திய மின்கட்டண ரசீது (Electricity Bill), மின் இணைப்பு உரிமையாளரின் ஆதார் அட்டை (Aadhaar Card), மானியத் தொகை வரவு வைக்கப்பட வேண்டிய வங்கிக் கணக்கு புத்தக முன் பக்க நகல் (Bank Passbook Copy), மொபைல் எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவை தேவை.

- தொடக்கச் செலவை எதிர்கொள்ள வங்கிக் கடன் பெற விரும்பினால், மின்கட்டண ரசீது மற்றும் ஆதார் அட்டையுடன் சேர்த்து உரிமையாளரின் பான் அட்டை (PAN Card) நகலையும் இணைக்கலாம்.

- பண்ணைப் பகுதிகளில் புழுதி படிவதைத் தவிர்க்க, வாரம் ஒருமுறை அல்லது பத்து நாட்களுக்கு ஒருமுறை சாதாரணத் தண்ணீர் ஊற்றி மென்மையான துணியால் பேனல்களைத் துடைத்துப் பராமரிப்பது உற்பத்தித் திறனைத் தக்கவைக்கும்.

- சோலார் பேனல்களுக்கு 25 ஆண்டுகள் வரை நீண்ட கால

உத்தரவாதம் உள்ளதால், ஒருமுறை செய்யும் முதலீடு கால் நூற்றாண்டு காலத்திற்கு மின்கட்டணச் சுமையற்ற இலவச மின்சாரத்தை வழங்குகிறது. அரசு வழங்கும் சரிபாதி மானியத்தைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்கள் வீடுகளிலும் பண்ணை வளாகங்களிலும் இத்தொழில்நுட்பத்தை அமைத்துத் தற்சார்பு ஆற்றல் பெறலாம்.

இவ்வாறு விவசாயிகள் பயனடையுமாறு தாரமங்கலம் வேளாண்மை துறை மூலம் கேட்டுக்கொள்கிறோம்

# கிராமத்தில் தங்கி வேளாண்மை குறித்த பயிற்சி




திருச்சி, அக்.25

திருச்சி, அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த 11 மாணவிகள், ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கிழ் பட்டுக்கோட்டை வேளாண் ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை தந்து நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் கிருஷ்ணமூர்த்தியிடம் வேளாண்மை ஆராய்ச்சி குறித்து கேட்டறிந்தனர்.

இப்பயிற்சி திருச்சி, அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் முனைவர் சத்யா, முனைவர் ஜானகி மற்றும் முனைவர் விஜயகுமார் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் நடைபெறுகிறது. தொடர்ந்து இதன் ஒரு பகுதியாக, மாணவிகள் 23.10.26 அன்று பட்டுக் கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு சென்றனர். அங்கு வேளாண்மை உதவி இயக்குநர் அப்சரா மற்றும் விதை ஆய்வாளர் முனைவர் நவீன் ஆகியோரைச் சந்தித்து விவசாகளுக்கான நடப்பில் இருக்கும் மாநில மற்றும் மத்திய அரசின் விவசாய திட்டங்கள், சம்பா தாளடி பருவ கால நெல் விதைகள் குறித்து கலந்துரையாடினர். மாணவிகளை வரவேற்று, பயிற்சிக் காலம் முழுவதும் தேவையான வழிகாட்டுதலையும் ஒத்துழைப்பையும் வழங்குவதாக உறுதியளித்தனர். இந்தச் சந்திப்பு, மாணவிகள் கள அனுபவத்தின் மூலம் வேளாண்மை விரிவாக்கப் பணிகள் மற்றும் உள்ளூர் வேளாண் நிர்வாகம் குறித்த நடைமுறை அறிவைப் பெறுவதற்கான சிறந்த தொடக்கமாக அமைந்தது.

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# இயற்கை வேளாண்மையில் நீமாஸ்திரம் தயாரிப்பு குறித்து வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் செயல்விளக்கம்

திருச்சிராப்பள்ளி, அக்.25

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு மாணவிகள் மா.ஹரிணி, அ.பராசக்தி, மு.பிரியதர்ஷினி, சே.பிரியதர்ஷினி, நா.ஸ்ரீவித்யா, பா.சுபர்ணா, ஹ.தஸ்லீமா நஸ்ரின், ச.வைஷ்ணவி, நா.ச.விவிதாஸ்ரீ மற்றும் ச.ஞா.யுவஸ்ரீ ஆகியோர், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.



இதன் ஒரு பகுதியாக, திருச்சி மாவட்டம், கண்ணனூர் கிராமத்தில் நீமாஸ்திரம் தயாரித்தல் மற்றும் அதன் பயன்பாடு குறித்து செயல்விளக்கம் அளித்தனர். நீமாஸ்திரம் என்பது வேப்ப இலைகள், வேப்பம் பருப்பு மற்றும் பசு மாட்டின் சிறுநீர் போன்றவற்றைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் ஓர் இயற்கை பூச்சி விரட்டிக் கரைசலாகும். இது இயற்கை வேளாண்மையில் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த உதவுகிறது. இதனைத் தயாரிக்கும் முறை, தேவையான மூலப்பொருட்கள் மற்றும் பயன்படுத்தும் முறைகள் குறித்து மாணவிகள் விவசாயிகளுக்கு தெளிவாக விளக்கினர்.

மேலும், இரசாயன பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைத்து, இயற்கை முறையில் பூச்சிகளை மேலாண்மை செய்வதன் முக்கியத்துவம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்தச் செயல்விளக்கத்தின் மூலம் விவசாயிகள் இயற்கை வேளாண்மை முறைகள் குறித்து தெரிந்து கொண்டு, சுற்றுச்சூழலுக்கு உகந்த பயிர் பாதுகாப்பு முறைகளைப் பின் பற்ற ஊக்குவிக்கப்பட்டனர்.

# விவசாயிகளுக்கு பூஜ்ஜிய ஆற்றல் குளிரூட்டும் அறை செயல்விளக்கப் பயிற்சி

திருவண்ணாமலை, அக்.25

கிருஷ்ணகிரி மாவட்டம், பையூரில் அமைந்துள்ள தோட்டக் கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் (HC & RI, Paiyur) நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள், திருவண்ணாமலை மாவட்டம், வாழவச்சனூரில் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தங்கியிருந்து, ஊரகத் தோட்டக் கலை அனுபவம் மற்றும் வேளாண் தொழில்துறை இணைப்பின் (RAWE) ஒரு பகுதியாக விவசாயிகளுக்கான பூஜ்ஜிய ஆற்றல் குளிரூட்டும் அறை (Zero Energy Cool Chamber) குறித்த செயல் விளக்க நிகழ்ச்சியை நடத்தினர்.



இந்நிகழ்ச்சியில், ம.ஆர்த்தி, பா.அஸ்வினி, க.அவந்திகா, கு.அழகுமுனிஸ்வரி, ச.பாலின் பிரின்சி, பா.பவதாரணி, சி.தனலட்சுமி, பெ.தரணி, ம.தர்ஷினி, ஜெ.தர்ஷினி, செ.துர்கா ஆகிய மாணவிகள் பூஜ்ஜிய ஆற்றல் குளிரூட்டும் அறை என்றால் என்ன, அதன் முக்கியத்துவம், கட்டமைக்கும் முறை, செயல்படும் விதம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர். மின்சாரம் இன்றி, ஆவியாதல் குளிர்விக்கும் முறையின் மூலம் காய்கறிகள் மற்றும் பழங்களின் புத்துணர்ச் சியைப் பாதுகாத்து, அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதில் இத்தொழில்நுட்பம் எவ்வாறு உதவுகிறது என்பதையும் எடுத்துரைத்தனர்.

மேலும், விவசாயிகள் தங்களது விளைபொருட்களைத் தரமாகப் பாதுகாத்து, சந்தைப்படுத்துவதன் மூலம் அதிக வருமானம் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. நிகழ்ச்சியின் இறுதியில் விவசாயிகள் தங்களது சந்தேகங்களைக் கேட்டறிந்து, மாணவர்களிடம் விளக்கம் பெற்றனர்.

இச்செயல்விளக்க நிகழ்ச்சி, விவசாயிகளிடையே குறைந்த செலவிலான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், விளைபொருட்களின் தரத்தையும் சேமிப்புக் காலத்தையும் மேம்படுத்தவும் உதவியாக அமைந்தது.

# உணவு பாதுகாப்பில் தாவர இனப்பெருக்கத்தின் பங்கு

## அறிவியல் வேளாண்மை மூலம் பசியற்ற உலகை நோக்கி...

'உணவே உயிர்; உணவுப் பாதுகாப்பே மனித குலத்தின் எதிர் காலம்.' உலக மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் கணிப்பின்படி, 2050ம் ஆண்டில் உலக மக்கள் தொகை சுமார் 9.7 பில்லியனை எட்டும். இந்த மக்கள் தொகைக்கு போதுமான, சத்தான மற்றும் பாதுகாப்பான உணவை உற்பத்தி செய்வது மனிதகுலத்தின் மிகப்பெரிய சவாலாக மாறி உள்ளது.




இந்தியாவைப் போன்ற விவசாய நாடுகளில், உணவுப் பாதுகாப்பு என்பது வெறும் தானிய உற்பத்தியை மட்டுமல்ல; அனைத்து மக்களுக்கும் போதுமான, சத்தான, தரமான மற்றும் மலிவு விலையில் உணவு கிடைப்பதை உறுதி செய்வதாகும். இந்த இலக்கை அடைய உதவும் மிக முக்கியமான அறிவியல் துறைகளில் ஒன்று தாவர இனப்பெருக்கம் (Plant Breeding) ஆகும்.

புதிய, அதிக மகசூல் தரும், நோய் மற்றும் பூச்சிகளைத் தாங்கும், வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற காலநிலை மாற்றங்களைச் சமாளிக்கும், மேலும் உயர்ந்த ஊட்டச்சத்து கொண்ட பயிர் ரகங்களை உருவாக்குவதன் மூலம், தாவர இனப்பெருக்கம் உலக உணவுப் பாதுகாப்பின் முக்கிய தூணாக விளங்குகிறது.

**உணவுப் பாதுகாப்பு என்றால் என்ன?**

உலக உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) வரையறைப்படி, 'அனைத்து மக்களும், எல்லா நேரங்களிலும், ஆரோக்கியமான வாழ்க்கைக்கு தேவையான போதுமான, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவை உடல், சமூக மற்றும் பொருளாதார ரீதியாகப் பெறும் நிலையே உணவுப் பாதுகாப்பு ஆகும்.'

**உணவுப் பாதுகாப்பு நான்கு முக்கிய தூண்களை அடிப்படையாகக் கொண்டது :**

- உணவு கிடைப்பது (Availability)
- உணவைப் பெறும் திறன் (Accessibility)
- உணவைச் சரியாகப் பயன்படுத்துதல் (Utilization)
- தொடர்ச்சியான கிடைப்பு (Stability)

இந்த நான்கு அம்சங்களையும் வலுப்படுத்துவதில் தாவர இனப்பெருக்கம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

**தாவர இனப்பெருக்கம் என்றால் என்ன?**

தாவர இனப்பெருக்கம் என்பது, விரும்பத்தக்க பண்புகளைக் கொண்ட பெற்றோர் ரகங்களைத் தேர்ந்தெடுத்து, கலப்பினம், தேர்வு மற்றும் நவீன உயிரித் தொழில்நுட்ப முறைகள் மூலம் மேம்பட்ட புதிய ரகங்களை உருவாக்கும் அறிவியலும் கலையும் ஆகும்.

**இதன் முக்கிய நோக்கங்கள் :**

- அதிக மகசூல்
- நோய் மற்றும் பூச்சி எதிர்ப்பு
- வறட்சி, உப்புத்தன்மை, வெப்பம் போன்ற அழுத்தங்களைத் தாங்கும் திறன்
- மேம்பட்ட தரம்

- அதிக ஊட்டச்சத்து
- குறுகிய காலத்தில் முதிர்ச்சி
- விவசாயிகளுக்கு அதிக இலாபம்

**பசுமைப் புரட்சியும் தாவர இனப்பெருக்கமும்**

1960-களில் இந்தியா கடுமையான உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொண்டது. அப்போது குறுகிய உயரம் கொண்ட, அதிக மகசூல் தரும் கோதுமை மற்றும் நெல் ரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் விளைவாக இந்தியா உணவுத் தானிய இறக்குமதி செய்யும் நாடாக இருந்து, தன்னிறைவு பெற்ற நாடாக மாறியது.

இந்த சாதனைக்கு தாவர இனப்பெருக்கமே அடித்தளமாக இருந்தது. இன்று இந்தியா உலகின் முன்னணி அரிசி, கோதுமை மற்றும் பல வேளாண் பொருட்கள் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

உணவுப் பாதுகாப்பில் தாவர இனப்பெருக்கத்தின் முக்கிய பங்குகள்

**1. அதிக மகசூல் தரும் ரகங்களை உருவாக்குதல்**

குறைந்த நிலப்பரப்பில் அதிக மகசூல் பெறுவது காலத்தின் தேவையாக உள்ளது.

தாவர இனப்பெருக்கம் மூலம் உருவாக்கப்படும் அதிக மகசூல் தரும் ரகங்கள் :

- உணவு உற்பத்தியை அதிகரிக்கின்றன.
- விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துகின்றன.
- உணவுப் பற்றாக்குறையைக் குறைக்கின்றன.

**2. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் ரகங்கள்**

இன்று விவசாயத்தின் மிகப்பெரிய சவால் காலநிலை மாற்ற மாகும்.

இதனால் ஏற்படுபவை :

- வறட்சி
- அதிக வெப்பநிலை
- திடீர் வெள்ளம்
- உப்புத்தன்மை
- புதிய நோய்கள்

இவற்றை சமாளிக்கும் திறன் கொண்ட ரகங்களை உருவாக்கு வதில் தாவர இனப்பெருக்கம் முன்னிலை வகிக்கிறது.

3. நோய் மற்றும் பூச்சி எதிர்ப்பு

ஒவ்வொரு ஆண்டும் உலகளவில் கணிசமான அளவு மகசூல் நோய் மற்றும் பூச்சி தாக்குதலால் இழக்கப்படுகிறது.

எதிர்ப்பு ரகங்களை உருவாக்குவதன் மூலம் :

- பூச்சிக்கொல்லி பயன்பாடு குறைகிறது.
- உற்பத்திச் செலவு குறைகிறது.
- சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது.
- மகசூல் நிலைத்தன்மை பெறுகிறது.

**4. ஊட்டச்சத்து மேம்பாடு (Biofortification)**

இன்றைய உலகில் மறைமுக பசியால் (Hidden Hunger) பல கோடி மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

தாவர இனப்பெருக்கம் மூலம் :

- அதிக இரும்புச் சத்து
- அதிக துத்தநாகம்
- அதிக புரதம்
- அதிக வைட்டமின்–A

கொண்ட பயிர் ரகங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இது குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும்.

**5. வறட்சி மற்றும் உப்புத்தன்மை தாங்கும் ரகங்கள்**

தமிழ்நாட்டில் பல பகுதிகளில் :

- நீர் பற்றாக்குறை
- உப்புத்தன்மை
- அதிக வெப்பம்

பெரும் சவாலாக உள்ளது.

இதனை சமாளிக்கும் பயிர் ரகங்கள் எதிர்கால உணவுப் பாதுகாப்பிற்கு அவசியம்.

**6. குறுகிய கால ரகங்கள்**

குறுகிய காலத்தில் அறுவடைக்கு வரும் ரகங்கள் :

- குறைந்த நீரில் வளர்கின்றன.
- இரு அல்லது மூன்று பயிர்களை ஒரே ஆண்டில் சாகுபடி செய்ய உதவுகின்றன.
- காலநிலை ஆபத்தைக் குறைக்கின்றன.

### 7. தரமான விளைபொருட்கள்

இன்று சந்தையில் தரமான பொருட்களுக்கு அதிக தேவை உள்ளது.

தாவர இனப்பெருக்கம் மூலம் :

- சிறந்த சமையல் தரம்
- நல்ல சுவை
- நீண்டகால சேமிப்பு
- பதப்படுத்தலுக்கு ஏற்ற தன்மை

கொண்ட ரகங்கள் உருவாக்கப்படுகின்றன.

### நவீன தாவர இனப்பெருக்க தொழில்நுட்பங்கள்

இன்றைய தாவர இனப்பெருக்கம் பாரம்பரிய தேர்வு முறைகளைத் தாண்டி பல நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துகிறது.

### 1. Marker-Assisted Selection (MAS)

மரபணு அடையாளங்களைப் பயன்படுத்தி விரைவாக சிறந்த ரகங்களைத் தேர்வு செய்கிறது.

### 2. Genomic Selection

முழு மரபணு தகவல்களின் அடிப்படையில் எதிர்கால செயல் திறனை முன்கணிக்கிறது.

### 3. Speed Breeding

ஒரு ஆண்டில் பல தலைமுறைகளை உருவாக்கி ரக மேம்பாட்டை வேகப்படுத்துகிறது.

### 4. Gene Editing (CRISPR)

தேவையான மரபணுக்களைத் துல்லியமாக மாற்றி விரும்பத்தக்க பண்புகளை உருவாக்க உதவுகிறது.

### 5. Doubled Haploid Technology

மிகக் குறுகிய காலத்தில் தூய இனங்களை உருவாக்க உதவுகிறது.

இந்தியாவில் தாவர இனப்பெருக்கத்தின் வெற்றிகள்

தாவர இனப்பெருக்கத்தின் மூலம் இந்தியாவில் பல பயிர்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

- அதிக மகசூல் தரும் நெல் ரகங்கள்
- நோய் எதிர்ப்பு கோதுமை ரகங்கள்
- எண்ணெய் வித்து மேம்பாட்டு ரகங்கள்

- பருப்பு வகைகளில் அதிக மகசூல் ரகங்கள்
- உயிரிச் செறிவூட்டப்பட்ட (Biofortified) ரகங்கள்

இவை உணவுத் தன்னிறைவை வலுப்படுத்தியுள்ளன.

**தமிழ்நாட்டிற்கான வாய்ப்புகள்**

தமிழ்நாட்டில் எதிர்கால தாவர இனப்பெருக்கம் பின்வரும் துறைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும் :

- வறட்சி தாங்கும் நெல் மற்றும் பருப்பு ரகங்கள்
- உப்புத்தன்மை தாங்கும் பயிர்கள்
- வெப்பத்தைத் தாங்கும் காய்கறிகள்
- அதிக புரதம் கொண்ட பருப்பு வகைகள்
- குறைந்த நீரில் வளரும் ரகங்கள்
- இயற்கை வேளாண்மைக்கு ஏற்ற ரகங்கள்

**எதிர்கால சவால்கள்**

எதிர்காலத்தில் தாவர இனப்பெருக்கம் எதிர்கொள்ள வேண்டிய முக்கிய சவால்கள் :

- காலநிலை மாற்றத்தின் வேகம்
- புதிய நோய்கள் மற்றும் பூச்சிகள்
- நிலப்பரப்பு குறைதல்
- நீர்ப்பற்றாக்குறை
- ஊட்டச்சத்து குறைபாடு

உயிரினப் பன்முகத்தன்மையைப் பாதுகாத்தபடி புதிய ரகங்களை உருவாக்குதல்

**முடிவுரை**

உலக மக்கள்தொகை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், ‘குறைந்த வளங்களில் அதிக உணவு உற்பத்தி‘ என்பதே வேளாண்மையின் மிகப்பெரிய இலக்காக உள்ளது. இந்த இலக்கை அடைவதற்கான அறிவியல் அடித்தளமாக தாவர இனப்பெருக்கம் விளங்குகிறது. அதிக மகசூல், நோய் மற்றும் பூச்சி எதிர்ப்பு, வறட்சி மற்றும் வெப்பத் தாங்குதிறன், மேம்பட்ட ஊட்டச்சத்து மற்றும் உயர்தர விளைபொருட்கள் கொண்ட புதிய ரகங்களை உருவாக்குவதன் மூலம், தாவர இனப்பெருக்கம் உலகளாவிய உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துகிறது.

எதிர்காலத்தில் மரபணு அறிவியல், உயிரித் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, தரவு அறிவியல் மற்றும் துல்லிய வேளாண்மை ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலம், உணவுப் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்த முடியும்.

அறிவியல் மற்றும் விவசாயம் கைகோர்க்கும் போது மட்டுமே ‘பசியற்ற, ஊட்டச்சத்து நிறைந்த, நிலையான உலகம்‘ என்ற கனவு நனவாகும்.

‘தாவர இனப்பெருக்கம் என்பது புதிய ரகங்களை உருவாக்கும் அறிவியல் மட்டுமல்ல; அது எதிர்கால தலைமுறையின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் மனிதகுலத்தின் நம்பிக்கையாகும்.‘

கட்டுரையாளர் : ***வெங்கடேஷ் ம, முதுநிலை உதவிப் பேராசிரியர் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), அபிநயா ரா, நான்காம் ஆண்டு மாணவி, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி–621104.***

# நெல் நாற்றின் வேர் நினைத்தல் செயல்விளக்கம் குறித்து வேளாண் கல்லூரி மாணவர்கள்




திருவாரூர், அக்.25

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரத்தில், செயல் படுத்தப்பட்டு வரும் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் அப்துல்லா, ஆகாஷ், பாலாஜி, இனிய அஸ்வின் ஜெயசூர்யா, பெய்ஸல் செப்பர்டு, பிரித்திவிராஜ், சந்தோஷ், சத்திய சீலன், சுதர்சன், வினோத் குமார் ஆகியோர் நெல் நாற்றின் வேர் நினைத்தல் (Seedling Root Dip) முறை குறித்த செயல்விளக்கம் அளித்தனர்.

இதன் ஒரு பகுதியாக, நெல் நாற்றுகளை நடவு செய்வதற்கு முன்பாக அவற்றின் வேர்களை உயிர் உரக் கரைசலில் குறிப்பிட்ட கால அளவு மூழ்க வைத்து நேர்த்தி செய்யும் முறை விளக்கினர். இதன் மூலம் நாற்றுகளின் வேர் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், பயிரின் ஆரம்பகால வளர்ச்சிக்கு உதவுவதற்கும் உள்ள வாய்ப்புகள் குறித்து எடுத்துரைத்தனர்.

மேலும், வேர் மூழ்கல் முறையைப் பரிந்துரைக்கப்பட்ட அளவு மற்றும் கால அளவின்படி மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இச்செயல்விளக்கத்தின் மூலம் நெல் சாகுபடியில் அறிவியல் சார்ந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் எடுத்துரைத்துனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333